
STATE COURTS
SINGAPORE

# பிணை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

- பிணை என்றால் என்ன?
- எத்தகைய உத்தரவாதம் வழங்கப்படலாம்?
- யார் பிணை வழங்கலாம்?
- பிணை வழங்குபவர் எவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடுவிப்பார்?
- குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணை நிபந்தனைகளை மீறினால் என்ன ஆகும்?

*மற்றும் இதர தகவல்கள்*



# பிணை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

## பிணை என்றால் என்ன?

காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நபர், அவருக்கு எதிரான வழக்கு முடிவடையும் வரை, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு ஒரு காவல் நிலையம் அல்லது நீதிமன்றத்திற்குத் திரும்புவார் என்பதற்கான உத்தரவாதமாக ஒரு தனிநபர் (**பிணை வழங்குபவர்**) பிணையமாக அல்லது வைப்பீடாக வழங்கும் சொத்தாகும்.

இரு வகையான பிணை வழங்கப்படலாம்: (a) ஒரு சட்ட அமலாக்க முகமையால் வழங்கப்படும் பிணை (இது, பொதுவாக முகமை பிணை என்று அழைக்கப்படுகிறது); மற்றும் (b) நீதிமன்றத்தால் வழங்கப்படும் பிணை (இது, பொதுவாக நீதிமன்ற பிணை என்று அழைக்கப்படுகிறது). ஒரு நபர், ஒரு சட்ட அமலாக்க முகமையால் கைது செய்யப்பட்ட பின்னும், நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படுவதற்கு முன்னும் அவருக்கு முகமை பிணை வழங்கப்படலாம். அவர் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு, ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட நபரானவுடன் (**குற்றஞ்சாட்டப்பட்டவர்**), நீதிமன்றம், முகமை பிணையை நீட்டிக்கலாம் அல்லது முகமை பிணையை இரத்து செய்துவிட்டு அதற்கு பதிலாக நீதிமன்ற பிணை வழங்கலாம்.

## எத்தகைய உத்தரவாதம் வழங்கப்படலாம்?

அது நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவைப் பொறுத்துள்ளது.

உத்தேசப் பிணை வழங்குபவர் அவரது சுய சொத்துக்களை (இது, பொதுவாக பணம் சாராத பிணை அல்லது ரொக்கமில்லா பிணை என்று அழைக்கப்படுகிறது) உத்தரவாதமாக வழங்க நீதிமன்றம் ஆணையிடலாம். இத்தனிப்பட்ட சொத்து உத்தேசப் பிணை வழங்குபவருக்கு மட்டுமே சொந்தமானதாக இருப்பதோடு முழுமையாக பணம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள், வீட்டு அறைகலன்கள், மின் சாதனங்கள் அல்லது மற்ற வீட்டுப் பொருட்கள் ஆகியவை உதாரணங்களில் அடங்கும். உத்தரவாதமாக வழங்கப்பட்ட சுய சொத்தின் மதிப்புக்கான ஆதாரத்தை வழங்குமாறு உத்தேசப் பிணை வழங்குபவரிடம் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளலாம்.

உத்தேசப் பிணை வழங்குபவர் ரொக்க பணம் அல்லது ரொக்க பணத்துக்கு ஈடான (இது, பொதுவாக பணம் சார்ந்த பிணை அல்லது ரொக்க பிணை என்று அழைக்கப்படுகிறது) உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிடலாம். பணம், நீதிமன்றத்திடம் ரொக்கமாக (S$50,000 வரை), ஒரு காசாளர் கட்டளையில் **"பதிவாளர், அரசு நீதிமன்றங்கள்"** என்று பெயரிட்டு, பேநௌ (PayNow) அல்லது நெட்ஸ் (NETS) (உத்தேசப் பிணை வழங்குபவரின் சொந்த ஏ.டி.எம் (ATM) அட்டையின் மூலம், கணக்கு/அட்டையின் தினசரி வரம்புக்கு உட்பட்டு) ஆகிய வழிகளில் செலுத்தப்படலாம். ரொக்க பணத்துக்கு ஈடான நிலையான வைப்புத் தொகை மற்றும் சேமிப்பு கணக்குகள் போன்றவற்றின் மூலமாகவும் கட்டணம் செலுத்தப்படலாம்.

## யார் பிணை வழங்கலாம்?

(a) நொடிப்பு நிலையில் அல்லாத;

(b) குற்றஞ்சாட்டப்பட்டவருடன் அதே வழக்கில் இணைந்து குற்றஞ்சாட்டப்பட்ட உடன் குற்றவாளியாக அல்லாத; மற்றும்

(c) அரசு நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் நிலுவையில் உள்ள அல்லது நடைபெற்றுகொண்டிருக்கும் வேறேதேனும் குற்றவியல் குற்றச்சாட்டுகளில் ஒரு நபராக அல்லாத 21 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசி (நீதிமன்றம் வேறுவிதமாக குறிப்பிட்டாலேயன்றி) பிணை வழங்கலாம்.

இந்த நிபந்தனைகள் அனைத்தையும் ஒரு நபர் நிறைவேற்றினாலும், பிணை வழங்குவதற்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படுவதற்கு முன் பிணை வழங்குபவராக தனது அனைத்து கடமைகளையும் அவரால் திருப்திகரமாக நிறைவேற்ற முடியும் என்று நீதிமன்றத்தை அவர் நம்ப வைக்க வேண்டும்.

## பிணை தொகையைத் தவிர, நீதிமன்றம் மற்ற நிபந்தனைகளை விதிக்கலாமா?

நீதிமன்றம் வேறுவிதமாகக் குறிப்பிட்டாலேயன்றி, நீதிமன்றம் பிணை வழங்கும் போது, பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்:

> குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது பயணப் பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும்;

> குற்றஞ்சாட்டப்பட்டவர், காவல்துறை/நீதிமன்ற காவலிடம் சரணடைய வேண்டும், புலன் விசாரணைகளுக்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும், அல்லது தேவைக்கேற்ப நீதிமன்றத்திற்கு நேரடியாக வர வேண்டும்;

> குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் போது எந்த குற்றச் செயலையும் புரிய கூடாது;

> குற்றஞ்சாட்டப்பட்டவர், அவர் தொடர்பாகவோ அல்லது வேறு நபர் தொடர்பாகவோ, எந்தவொரு சாட்சியுடனும் தலையிடக்கூடாது அல்லது மற்றவகையில் நீதியின் போக்குக்குத் தடையாக இருக்கக்கூடாது; மற்றும்

> குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் சிங்கப்பூரை விட்டு வெளியேறக்கூடாது.

பொதுவாக விதிக்கப்படும் மற்ற நிபந்தனைகள் இவற்றை உள்ளடக்கும்:

> குற்றஞ்சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்டவரை நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு கொள்ளக் கூடாது;

> குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட சிகிச்சைகளுக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் (வழக்கின் முடிவு அறியப்படும் வரை); மற்றும்

> குற்றஞ்சாட்டப்பட்டவர் மின்னியல் கண்காணிப்பிற்கு உட்படவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் இளம் குற்றவாளியாக இருந்தால் (21 வயதிற்கும் கீழ்ப்பட்டவர்), நீதிமன்றம் பின்வரும் நிபந்தனைகளை விதிக்கலாம்:

> குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெற்றோர் (கள்) அல்லது காப்பாளர் (கள்) மட்டுமே பிணை வழங்குபவராக இருக்கலாம்;

> குற்றஞ்சாட்டப்பட்டவர் நேர கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும்; மற்றும்

> குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்ந்து பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

## குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு வரத் தவறினால்?

குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டு, தேவைப்படும் போது நீதிமன்றத்திற்கு வரத் தவறி, அவர் வராததற்கு நியாயமான காரணம் எதுவும் இல்லையென்றால் நீதிமன்றம் அவருக்கு எதிராக ஒரு பிடியாணையைப் பிறப்பிக்கலாம்.

அதே சமயம், பிணை தொகை முழுவதும் ஏன் பறிமுதல் செய்யப்படக்கூடாது என்று நீதிமன்றத்திடம் விளக்கமளிக்க பிணை வழங்கியவருக்கு ஒரு "ஷோ காஸ்" ("Show Cause") (காரணம் காட்டுதல்) விசாரணைக்குத் தோன்றும்படி ஓர் அறிவிப்பு அனுப்பப்படும். பிணை வழங்கியவரின் விளக்கம் போதுமானதாக இல்லை என்றால், மற்றும் அவரது கடமைகளில் ஏதேனும் ஒன்றை அவர் மீறியுள்ளார் என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால், முழு பிணை தொகையை அல்லது அதில் ஏதேனும் பகுதியை நீதிமன்றம் பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்யப்பட்ட பிணை தொகை பிணை வழங்கியவரால் செலுத்தப்படாத நிலையில், பிணை வழங்கியவருக்கு 12 மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

## பிணை வழங்குபவர் எவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடுவிப்பார்?

குற்றஞ்சாட்டப்பட்டவரின் பிணை வழங்குபவராக இருப்பதற்கு ஓர் உத்தேசிக்கப்பட்ட பிணை வழங்குபவர் அரசு நீதிமன்றங்களின் 4-வது தளத்தில் அமைந்துள்ள பிணை நிலையத்தில் ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது, உத்தேசப் பிணை வழங்குபவரிடம் பின்வரும் ஆவணங்கள் இருக்க வேண்டும்:

> அவரது அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு;

> குற்றஞ்சாட்டப்பட்டவரின் பயணப் பத்திரம், உதாரணத்திற்கு, அவரது கடவுச்சீட்டு (பிணை வழங்கும்போது இதை ஒரு நிபந்தனையாக நீதிமன்றம் விதித்திருந்தால், மற்றும் நீதிமன்றத்திடம்/காவல்துறையிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை என்றால்); மற்றும்

> வழங்கப்பட்ட பிணை ரொக்க பணமாக இருந்தால் அதற்குத் தேவையான அனைத்து துணை ஆவணங்கள்.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் பிணை இரு கட்டங்களாக நிர்வகிக்கப்படும்:

> முதல் கட்டத்தில், பிணை நிலைய அதிகாரி ஒருவர் உத்தேசப் பிணை வழங்குபவரை நேர்காணல் செய்து அவரிடம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் பிணை நிபந்தனைகளையும் மற்றும் பிணை வழங்குபவரின் கடமைகளையும் விளக்குவார். இக்கட்டத்தில், உத்தேசப் பிணை வழங்குபவர் பிணை நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும்.

> இரண்டாவது கட்டத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பிணை வழங்குவதற்கு உத்தேசப் பிணை வழங்குபவர் தகுந்தவரா என்று மேஜிஸ்திரேட் மதிப்பிடுவார். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவர் காவலிலிருந்து விடுவிக்கப்படுவார். இல்லையெனில், தகுந்த பிணை வழங்குபவர் கிடைக்கும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவர் காவலில் இருப்பார்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு (a) சிங்கப்பூரை விட்டு வெளியூர் செல்வதற்கான அனுமதி வழங்கப்படும் போதும் மற்றும் கூடுதல் பிணை நிபந்தனைகள் விதிக்கப்படும் போதும்; மற்றும் (b) முடிவுச்செய்யப்படாத மேல்முறையீடுக்கான பிணை  வழங்கப்படும் போதும் இதே போன்று இரு கட்டங்களாக நிர்வகிக்கப்படும்.

## குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு முடிவதற்கு முன்பே பிணை வழங்கிய ஒருவர் பிணை பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட முடியுமா?

பிணை வழங்கியவர் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அடுத்த குறிக்கப்பட்ட நீதிமன்ற விசாரணையில் தன்னை பிணை வழங்குவதிலிருந்து விடுவித்துக்கொள்ள விண்ணப்பிக்கலாம். மாறாக, குற்றஞ்சாட்டப்பட்டவரின் அடுத்த நீதிமன்ற விசாரணைக்கு முன்பே பிணை வழங்கியவர் பிணை பொறுப்பிலிருந்து அவரை விடுவித்துக்கொள்ள விரும்பினால், அவர் விரைவாக ஒரு விசாரணை தேதி குறிக்குமாறு கேட்டு அரசு நீதிமன்றங்களுக்கு **go.gov.sg/writetosgcourts** வாயிலாக எழுதலாம். விரைவாக ஒரு தேதி குறிக்கப்படலாம், ஆனால், இது நீதிமன்றம் கிடைப்பதைப் பொறுத்துள்ளது.

பிணை வழங்கியவர் கட்டாயமாக குற்றஞ்சாட்டப்பட்டவருடன் நேர்முகமாக நீதிமன்ற விசாரணைக்கு வந்து பிணை பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்க விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பம் செய்யும்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கிருப்பதை அவர் உறுதிசெய்துகொள்ள வேண்டும். பிணை பொறுப்பிலிருந்து தன்னை விடுவிப்பதற்கான அவரது விண்ணப்பத்தை நீதிமன்றம் அனுமதித்தவுடன் ஒரு பிணை வழங்கியவர் என்ற அவரது கடமைகள் முடிவடையும்.

அதன் பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணை வழங்க மற்றொருவரை ஏற்பாடு செய்ய அழைக்கப்படுவார். அவர் குறிப்பிட்ட மற்றொரு பிணை வழங்குபவர் அவருக்குப் பிணை வழங்க சமர்ப்பித்த விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டாலேயன்றி குற்றஞ்சாட்டப்பட்டவர் காவலில் வைக்கப்படுவார்.

## நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சிங்கப்பூரை விட்டு செல்வதற்கான விண்ணப்பத்தை எவ்வாறு செய்வார்?

நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சிங்கப்பூரை விட்டு செல்ல நீதிமன்றத்தின் அனுமதி இருந்தாலேயன்றி அவ்வாறு செய்ய முடியாது. சிங்கப்பூரை விட்டு செல்வதற்கான விண்ணப்பத்தை (இது பொதுவாக அதிகார எல்லையை விட்டு வெளியேறுவதற்கான விண்ணப்பம் என்று அழைக்கப்படும்) அவர் ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS) மூலமாகவோ அல்லது அவருடைய அடுத்த நீதிமன்ற விசாரணையின் போதோ செய்து கொள்ளலாம்.

அதன் பிறகு, நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும். குற்றஞ்சாட்டப்பட்டவரின் விண்ணப்பத்தை விசாரிக்க நீதிமன்றம் முடிவு செய்தால், நீதிமன்றத்தின் முன் தனது விண்ணப்பத்தை முறைப்படி செய்ய நீதிமன்றத்திற்கு வர வேண்டிய தேதி மற்றும் நேரம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குத் தெரிவிக்கப்படும்.

இத்தேதியன்று பிணை வழங்கியவரும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் நீதிமன்றத்திற்கு வர வேண்டும். குறிப்பிடப்பட்ட தேதிகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சிங்கப்பூரை விட்டு செல்வதற்குச் சம்மதிக்கிறாரா என்று பிணை வழங்கியவரிடம் கேட்கப்படும் (குற்றஞ்சாட்டப்பட்டவர் சிங்கப்பூருக்கு வெளியே இருக்கும்போதும் பிணை வழங்கியவர் தொடர்ந்து அவருக்குப் பிணை வழங்குபவராக இருக்கும் காரணத்தால்). அதிகார எல்லையை விட்டு வெளியேற குற்றஞ்சாட்டப்பட்டவரின் விண்ணப்பத்திற்கு ஏதேனும் எதிர்ப்புகள் உள்ளனவா என்று அரசு தரப்பிடமும் கேட்கப்படும். குற்றஞ்சாட்டப்பட்டவரை அதிகார வரம்பை விட்டு வெளியேற அனுமதிக்கலாமா என்பதை அனைத்து தரப்பினர்களையும் விசாரித்தறிந்த பிறகு நீதிமன்றம் முடிவு செய்யும்.

## குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு முடிந்த பிறகு பிணை வழங்கியவர் எவ்வாறு பிணை தொகையைத் திரும்பப் பெறலாம்?

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு முடிவடைந்த நிலையில், பிணை தொகையைத் திரும்பப் பெறுவதற்குப் பிணை வழங்கியவர் மேற்கொண்டு எதையும் செய்யத் தேவையில்லை. ரொக்க பிணைக்கான பணங்கள் பிணை வழங்கியவரின் நியமிக்கப்பட்ட வங்கி கணக்கில் 21 வேலை நாட்களுக்குள் திரும்பக் கொடுக்கப்படும்.

## பிணை நிலையத்தின் செயல்படும் நேரங்கள் என்ன?

### திங்கள் முதல் வியாழன் வரை

காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை *(கடைசி பதிவு மதியம் 12.30 மணிக்கு)*
மதியம் 2.00 முதல் மாலை 6.00 வரை *(கடைசி பதிவு மாலை 5.00 மணிக்கு)*

### வெள்ளிக்கிழமை

காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை *(கடைசி பதிவு மதியம் 12.30 மணிக்கு)*
மதியம் 2.00 முதல் மாலை 5.30 வரை *(கடைசி பதிவு மாலை 4.30 மணிக்கு)*

### சனிக்கிழமை

காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை *(கடைசி பதிவு நண்பகல் 12.00 மணிக்கு)*

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் **1 மார்ச் 2023** தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg